ஐக்கிய நாடுகள் சபையின் மகாநாடு

"உலகப் பிரச்சினைகளை
மனிதத்தன்மையோடு நோக்காமையே
இன்றைய நெருக்கடிகளுக்குக்
காரணமாகும்"

— ஆர். பிரேமதாச

320
பிரேம

இலங்கைப் பிரதம அமைச்சரின் உரை

1980 செப்ரெம்பர் 29

பிரதம மந்திரி
கௌரவ ஆர். பிரேமதாச
ஐக்கிய நாடுகள் சபைச்
செயலாளர் நாயகம்
கலாநிதி கர்ட் வோல்ட்ஹெய்ம்
உடன்



320
S656

EVELYN RUTNAM LIBRARY
309
JAFFNA

தலைவர் அவர்களே,

செயலாளர் நாயகம் அவர்களே,

மதிப்பு மிக்க பிரதிநிதிகளே,

இலங்கை மக்களின் சகோதரத்துவமிக்க நல் வாழ்த்துக்களை, இந்த மதிப்புமிகு சர்வதேச சம்மேளனத்தின்போது உங்களிடம் சமர்ப்பிக்கக் கிடைத்ததைச் சிறந்த சலுகையாகக் கருதுகிறேன். 1978 இல் புதிய குடியரசு அரசியலமைப்புக்கு இணங்க நிறுவப் பெற்ற இலங்கை ஜனநாயக சமதர்ம குடியரசின் முதலாவது பிரதம அமைச்சர் என்ற முறையில் நான் உங்கள் முன்னிலையில் உரை நிகழ்த்துகிறேன்.

சுதந்திர வாக்குகளின் மூலம் தெரிவுசெய்யப் பெற்ற இலங்கை மக்களின் பிரதிநிதிகளினால் எங்கள் புதிய அரசியல் அமைப்பு நிறைவேற்றப்பட்டதென்பதை நீங்கள் அறிவீர்கள். பொது மக்களின் ஆணை மீது இப்பிரதிநிதிகள் தெரிவு செய்யப் பெற்றனர். அந்த ஆணையினால் பாராளுமன்றத்தில் உள்ள ஆசனங்களில் ஆறில் ஐந்து பங்கைப் பெற்று மிக உயர்ந்த அதிகாரத்துடன் எங்கள் அரசு பதவிக்கு வந்தது.

அழகிய, ஆழமான, அலங்காரமான சொல்லடுக்குகளினால் சிறந்த உரையை உங்கள் முன் நிகழ்த்துவதோ அல்லது இன்று உலகை எதிர்நோக்கியுள்ள ஆழமான பிரச்சினைகள் பற்றி நீண்ட உரை நிகழ்த்துவதோ எனக்குரிய பணியெனக் கருதவில்லை.

சகல செல்வங்களும் நிறைந்த சமூக பொருளாதார அமைப்புள்ள கற்பனை உலகில் நுழையும் திறவுகோல் என்னிடம் உண்டு என்னும் உணர்வுடன் உங்கள் முன்னிலையில் உரை நிகழ்த்தும் எண்ணம் எனக்கில்லை.

மனித இனம் சமாதானம், நீதி, சமத்துவம் ஆகியவற்றைத் தேடிச் செல்லும் முயற்சிக்கு உங்களோடு சேர்ந்து உதவுவதற்காகவே பணிவான உணர்வுடன் உங்கள் முன்னிலையில் நிற்கிறேன்.

நீண்ட காலமாக சனநாயகத்தைப் பின்பற்றியதன் காரணமாகப் பெற்றுக் கொண்ட நீண்ட அநுபவத்தினால் சமாதானம், நீதி, சமத்துவம் போன்ற சிறந்த கொள்கைகள் மீது எங்கள் மக்களுக்கு அசைக்க முடியாத பக்தியும் நம்பிக்கையும் உண்டு.

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இலங்கை மக்கள் சர்வ ஜன வாக்குரிமையைப் பெற்றார்கள். இதனை நினைவு கூரும் விழா வினை அடுத்தாண்டில் நடத்த எண்ணியுள்ளோம். எங்கள் மக்க ளின் உள்ளங்களிலுள்ள ஆழமான ஆன்மீக உணர்வினால், நான் மேற்குறிப்பிட்ட உயர்ந்த கொள்கைகள் மீது அவர்களுக்கு நீண்ட கால ஈடுபாடுண்டு.

நான் முப்பதாண்டுகளுக்கு மேற்பட்ட எனது அரசியல் வாழ்வில் ளவற்ற அநுபவங்களைப் பெற்றேன். நகரிலுள்ள சேரிகளிலும் ர அமைந்துள்ள கிராமங்களிலும் வாழும் சகல தரங்களிலுமுள்ள மக்களுடன் சேர்ந்து பணியாற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அரசாங்க ரீதியாகவும் அதற்குப் புறம்பாகவும் மேற்குறிப்பிட்ட மக் களுடன் சேர்ந்து பணியாற்றியதன் மூலம் நான் பெற்ற பரந்த அநுபவத்தைக் கொண்டு ஆக்கப் பெற்ற எனது எண்ணங்களில் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

தலைவர் அவர்களே, ஐக்கிய நாடுகள் சபையின் முப்பத்தைந்தாவது கூட்டத்தொடரின் தலைமைப் பதவிக்குத் தங்களைத் தெரிவு செய்தது குறித்துத் தனிப்பட்ட முறையில் எனது வாழ்த்துக்களையும் சிறப்பாக எனது பேராளர் குழுவின் வாழ்த்துக்களையும் முதலில் தங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன். தங்களுடைய நாடும் எங்களுடைய நாடும் நீண்ட காலமாக உறுதியான நட்புணர்வுடனும் நெருங்கிய ஒத்துழைப்புட னும் செயலாற்றியுள்ளன. இதனை இலங்கை மக்களாகிய நாங்கள் மிகப்பெருமையாக மதிக்கிறோம்.

இக்கூட்டத் தொடரின் கருத்தரங்குகளைச் சரியான வழியில் நடத்து வதற்கு இராஜதந்திரம் பற்றித் தங்களுக்குள்ள நீண்ட அநுபவமும் செயல் அறிவும் மிகவும் உதவியாக இருக்குமென உறுதியாக நம்புகிறேன். எங்கள் பேராளர் குழுவின் நல்வாழ்த்துக்களைச் சமர்ப் பித்து தங்கள் முன்னுள்ள முக்கிய பணிகளைத் திருப்திகரமாக நிறைவேற்றுவதற்கு எங்களுடைய முழு ஒத்துழைப்பினையும் அன்புடன் நல்கிறோம்.

முன்பு இச்சபையின் தலைமைப் பதவியை வகித்த தன்சானியாவின் தூதுவரான சாலிம் அவர்கட்கு இச்சந்தர்ப்பத்தில் எனது பாராட்டு தலைத் தெரிவிக்க விரும்புகிறேன். அவரின் தலைமையில் நடை பெற்ற விசேட, அதிவிசேட கூட்டத் தொடர்களைப் பற்றிக் கவனிக்கு விடத்து அவர் தலைமைதாங்கிய காலத்தில் அவரது பாரபட்சமற்ற தன்மையும், சரியாக விஷயங்களை விளங்குமாற்றலும், சரியான தீர்ப்பும் இக் கூட்டத்தொடர் யாவற்றிற்கும் மிகவும் பயன்படு மென்பதில் சந்தேகமில்லை.

இச்சபையின் செயலாளர் நாயகம் செய்த சேவையைப் பற்றிப் பாராட்டக் கிடைத்ததற்கு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். சமாதானத்திற்காக அவரது உறுதியான ஈடுபாடும் அதனைப் பெறுவதற்காக அவர் கஷ்டத்தைப் பாராது எடுக்கும் உயர்ந்த முயற்சியும் யாவரும் தெரிந்ததே.

சர்வதேச மக்கள் கூட்டத்தைச் சேர்ந்த சிறந்த சில தலைவர்களின் மறைவினால் இவ்வாண்டு உலகிற்குப் பேரிழப்பு ஏற்பட்டது. இரண்டாவது உலகயுத்தத்தின் போது பணிபுரிந்த மாபெரும் வீரர்களில் இறுதியாக இருந்த யூகோசிலேவகியாவைச் சேர்ந்த யோசேப் ப்ரோஸ் டிட்டோ அவர்கள் எம்மிலிருந்து மறைந்து போனார். இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப் பின் சர்வதேச இணைப்பினை ஏற்படுத்துவதற்காகக் கஷ்டப்பட்டு உழைத்த ஒரு சிலரில் ஜனாதிபதி டிட்டோவும் ஒருவராவர். அணிசேரா இயக்கத்தின் ஆரம்பகாலத் தலைவரென்ற முறையில் இலங்கை மக்கள் ஜனாதிபதி டிட்டோவை மிக மரியாதையுடனும் அன்புடனும் நினைவுகூர்கிறார்கள். எங்கள் நாட்டின் வெளி நாட்டுக் கொள்கை என்னும் ஆடையில் தங்க நூல் போல் அணிசேராக் கொள்கை இழையோடியிருப்பதாக எங்கள் மேன்மை தங்கிய ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் கூறியுள்ளார்.

யப்பான் நாட்டு பிரதம அமைச்சர் ஒஸிரா அவர்களின் மறைவு குறித்து அந்நாட்டு மக்களுடன் சேர்ந்து நாங்களும் வருந்துகிறோம். போட்ஸ்வானா நாட்டின் முதன் ஜனாதிபதி சேர் செரெட்ஸ்காமா அவர்களின் மறைவு குறித்தும் அந்நாட்டு மக்களுடன் சேர்ந்து வருந்துகிறோம். ஜோர்டான் நாட்டு மக்களுடன் சேர்ந்தும் கவலை அடைகிறோம்.

சிம்பாப்வே, சென்ற் வின்சன்ட்–குறேனடின்ஸ் ஆகிய இரண்டு புதிய அங்கத்துவ நாடுகளை இக்கூட்டத் தொடரின் போது அன்புடன் வரவேற்கிறோம். சிம்பாப்வே அரசை அன்புடன் வரவேற்கும் போது எனது தனிப்பட்ட மகிழ்ச்சியும் கலந்துள்ளது. சென்ற ஆண்டு லுசாக்கா நகரில் நடைபெற்ற பொதுநலவரசு அமைப்புத் தலைவர்களின் கூட்டத்தில் சிம்பாப்வே அரசுக்கு சுதந்திரம் கிடைப்பதற்குக் காரணமாயிருந்த தீர்மானம் எடுக்கப்பட்டது. இதில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது.

சிம்பாப்வே நாட்டின் சுதந்திரத்திற்காக நாங்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளும் ஊக்கமும் பயனளித்து, சிம்பாப்வே சுதந்திரம் பெற்றதோடு இந்த சர்வதேச சம்மேளனத்தில் எங்களுடன் சேர்ந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

இவ்விரு நாடுகளையும் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொண்டமையால் இச்சபையின் அங்கத்துவம் எவருக்கும் நியாயமானதென்பதும் அளவு, அதிகாரம், மக்கள் தொகை, தரம் ஆகியவைகளைக் கவனியாது எல்லா அங்கத்துவ நாடுகளும் சமமானவை என்னும் அடிப்படைக் கொள்கையை மீண்டும் காணக்கூடியதாயுள்ளது.

தலைவர் அவர்களே, மதிப்புமிக்க பிரதிநிதிகளே, மதிப்புமிக்க இச்சம்மேளனத்திற்கு எங்கள் மேன்மை தங்கிய ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களின் பாராட்டுதல்களைத் தெரிவிப்பதுடன் அவருடைய நல் வாழ்த்துக்களையும் இக் கூட்டத் தொடருக்கு மிக்க கௌரவத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

தலைவர் அவர்களே, கடந்த பல மாதங்களாக உலகத் தலைவர்கள் பலர் சர்வதேச நிலைமை சீரழிந்துள்ளதென்று கூறியுள்ளனர். இக் கருத்துக்கு எதிராக அவரும் இருப்பாரென நான் எண்ணவில்லை. இச் சீரழிவிற்குக் காரணமான விஷயங்கள் குறித்து கருத்து வேற்றுமை இருக்கக்கூடும்.

நாங்கள் சர்வதேச தொடர்புகளின் முக்கியமான சந்திக்கு வந்திருக்கிறோம், என்பதில் ஐயமில்லை. இந்த நூற்றாண்டில் வருகிற இரண்டு தசாப்தங்களில் எங்கள் கூற்றிலும் பார்க்கச் செய்கையிலேயே சர்வதேச நிலைமை உருவாகும். மனித வரலாற்றில் முன்னொரு போதுமில்லாத அளவிற்கு ஒரு தீர்க்கமான சந்திக்கு வந்திருக்கிறோம். இதிலிருந்து ஒரு பாதைவழியே சென்றால் மனித வரலாறு எதிர்ப்பார்க்கக்கூடிய உலகிற்குச் செல்லக் கூடியதாக இருக்கும். அடுத்த பாதையில் சென்றால் அழிவென்னும் பாதாளத்தைச் சென்றடையும். அப்பாதை மூலம் சென்றால் நாங்கள் மதிக்கின்ற மனிதர்மம் அழியுமென்பது உறுதி.

இச்சவாலை எவ்வாறு எதிர்நோக்கப் போகிறோம் ?

இச்சவால் மிகப் பெரியது. இப்பிரச்சனை மிகவும் சிக்கலானதால் இன்று நாங்கள் நிற்குமிடத்தில் இருந்தே விடைகாண வேண்டியுள்ளது. ஒவ்வொரு நாடுகளும் தனித் தனியாகவோ அல்லது சிறு குழுக்களாகவோ பிரிந்து இப்பிரச்சனையைத் தீர்க்க முடியாது. நாங்கள் இச்சவாலை உலக மட்டத்தில் எதிர்நோக்க வேண்டியிருக்கையில் துரதிருஷ்டவசமாகச் சில நாடுகள் தனித்தனியே இப்பிரச்சனைக்குத் தீர்வுகாண முயல்வதாகத் தோன்றுகின்றது.

இற்றைக்கு 35 ஆண்டுகளுக்கு முன் உலக மக்களால் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது. மனித இனத்தின் உயர் கொள்

கைகள் ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்தின் மூலம் இன்றும் பிரகாசிக்கிறது. பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடிய நிறுவனமான ஐக்கிய நாடுகள் சபை மீது இன்று சிலருக்கு சந்தேகம் ஏற்பட்டிருப்பது கவலைக்குரியதாகும். ஐக்கிய நாடுகள் சபை ஏற்படுத்தியுள்ள வழி முறைகள் மூலம் கூட்டாகவும் ஒத்துழைப்புடனும் இன்றைய நெருக் கடி நிலையைத் தீர்ப்பதற்குச் சரியான நோக்குடனும் கருத்துடனும் நாம் செயற்பட வேண்டியுள்ளது.

இந்து சமுத்திரம் சமாதானப் பிராந்தியமாக ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட அறிக்கையைச் செயற்படுத்துவதற்காக இச்சபையின் உதவியுடன் நடத்தவிருக்கும் சர்வதேச சம்மேளனத்தை ஆசியாவில் நாம் அன்புடன் வரவேற்கிறோம். இந்து சமுத்திரத்தைச் சூழவுள்ள அரசுகளும் ஏனைய அரசுகளும் இந்து சமுத்திரத்தை உண்மை யாகவே சமாதானப் பிராந்தியமாக்குவதற்குக் கூட்டு முயற்சிகள் எடுக்க வேண்டும். தமது மக்களுக்குச் சிறந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான கவனத்தை ஈர்க்கவும், தமது சக்தியை ஒன்று சேர்க்கவும் தமது வளங்களைப் பயன்படுத்தவும் எங்களுடைய இப்பிரதேச அரசுகளுக்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தவே சமா தானத்தை நோக்கிச் செல்கிறோம்.

உண்மையாகவே போருக்கு ஆயத்தமாவதாலும், போர்க்கருவிகளை ஒன்று சேர்ப்பதினாலும் ஏற்படக்கூடிய நியாயமற்ற நிலையை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. இப்பிரச்சனையில் சர்வதேச அரசியல் கொள்கை அடங்குகிறது. அதாவது நாடுகளின் உள்நாட்டலுல் களில் தலையிடாதிருப்பதும் அதிகாரப் பிரயோகத்தை நிராகரிப்பதும் ஆகும். இலங்கை, தேரவாத பௌத்த மதக் கோட்பாட்டின் மைய மாக புகழ் பெற்றுள்ளது. பௌத்த மதத் தத்துவத்தில் அடங்கி யுள்ள சனாதன உண்மைகளில் அகிம்சை மிகப் பெறுமதி வாய்ந்த உண்மையாகும். இந்த அகிம்சையின் காரணமாக பௌத்த தர்மம் புகழ்பெற்ற சர்வதேச சக்தியாக மாறியுள்ளது. பௌத்த தர்மம் அகிம்சையை அடிப்படையாகக் கொண்டமையால் கடந்த இரண்டா யிரந்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக அது மக்களுக்கிடையே நல்லெண்ணத்தை வளர்க்கும் வழியாக அமைந்துள்ளது.

இதற்கு ஒரு நல்ல உதாரணம், தர்மாசோக சக்கரவர்த்தியின் தர்ம விஜயத்தில் காணப்படுகிறது. இதன் மூலம் அவர் அரசுகளுக்கிடை யில் தொடர்புகள் ஏற்படுமிடத்து சற்கருமங்கள் பற்றிய அடிப்படையை நிறுவ எண்ணினார். தர்மாசோக சக்கரவர்த்தி மேற்கு ஆசியாவிலும் தெற்கு ஆசியாவிலும் உள்ள ஆட்சியாளரிடம் தனிப்பட்ட முறையில் தர்ம தூதுவர்களை அனுப்பினார். நல்லெண்ணம் பற்றிய செய்திகளை

எடுத்துச் சென்ற அவர்கள் நற்கருமங்களைப் போதித்தார்கள். பௌத்த தர்மம் அவர்கள் போதித்த நற்கருமங்களுக்கு அடிப்படையாக இருந்தது.

அச் சக்கரவர்த்தியின் கொள்கை மனித வரலாற்றில் மாபெரும் முயற்சியாகும். ஆட்சியாளர் ஒருவர் இந்த சற்கருமத்தைச் சர்வதேசத் தொடர்புக்குக் கொணர்ந்தமை பெருமுயற்சியெனக் குறிப்பிடலாம். உலகப் பிரச்சனைகள் பற்றியும் சர்வதேச நல்லெண்ணங்கள் பற்றியும் மனிதாபிமானத்தோடும் நல்லொழுக்கத்தோடும் நோக்காதிருப்பது எமது நாடுகளிற் காணப்படும் குறையாகும். இதுவே எமது இன்றைய நெருக்கடிக்கு அடிப்படையாக இருக்கக்கூடும்.

மனித சமுதாயம் காட்டுமிராண்டி வாழ்க்கையிலிருந்து ஒழுங்கான வாழ்க்கை வாழ ஆதிகாலந்தொட்டு முயன்று வருகிறது. இவ்வாறு முன்னேறிக் கொண்டு, அன்பையும் அகிம்சையையும் அடிப்படையாகக் கொண்ட இரக்க ரீதியாகச் செயற்படக்கூடிய உலக சமுதாயத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு நாம் முயலக் கூடாதா? வாழ்வின் சகல மட்டங்களிலும் எங்கள் தனிப்பட்ட தொடர்பைப் போல் நாடுகளுக்கிடையேயுள்ள தொடர்பிலும் அன்பு நெறியைப் பின்பற்ற உலகிலுள்ள எல்லோருக்கும் நாம் முன் மாதிரியாக இருக்க முடியாதா?

இம்மாதிரியான முயற்சியின் மூலமாகவே எங்களுக்குரியதாக இருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கம் சரியான முறையில் நிறைவேறும் என நான் எண்ணுகிறேன்.

ஆயுத மோதல்களும் இது போன்ற மோதல்களும் பற்றிய பய முறுத்தல் மனித இனத்திற்கு எச்சரிக்கையாக உள்ளது. சர்வதேச நிலையில் நெருப்பு மூளும் இடங்கள் அநேகமுண்டு. இம் மாதிரியான இடங்களை அவ்வாறேவிட்டு விடுவதனாலும் புதிதாக நெருப்பு மூளும் இடங்களில் வைக்கோலை இடுவதனாலும் மிலேச்சத்தனத்தினாலும் கவனயீனம் பற்றிய ஆபத்தான கருத்து ஏற்படுவதற்கு இடமுண்டு. இம்மாதிரியான கருத்துக் காரணமாக அதிகாரம் பிரயோகிக்கத் தூண்டப்படுகிறது. இதேபோல் அதிகாரத்தைப் பிரயோகிக்காமல் இயலாதென்ற கடுமையான உணர்வும் தலைதூக்குகிறது.

சட்டப்படி ஒழுகுபவர்களிடமும் சட்டத்தை மதிப்பவர்களிடமும் ஒரு வித ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. சட்டத்தை மதிப்பவர்களிலும் பார்க்க சட்டத்தை மதிக்காதவர்கள், பண்பற்றவர்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். தவறான செயல்களில் ஈடுபட்டிருப்பவர்கள் முன்னேறும் போது சட்டத்தை மதிக்கும் நற்பண்புடையவர்கள்

கஷ்டப்படுவதை நாங்கள் பெரும்பாலும் கண்டிருக்கிறோம். இதனைச் சாதாரண சமூகத்தில் காண்பதுபோல் சர்வதேசத் தொடர்பிலும் காணக்கூடியதாயிருக்கிறது. ஒருவர் தாம் கூறுவதைக் கேட்பதற்குக் கூக்குரலிட வேண்டுமா? கவனத்தை ஈர்ப்பதற்குப் பயமுறுத்த வேண்டுமா? உதவி பெறுவதற்காக எச்சரிக்கை செய்ய வேண்டுமா? ஜனநாயக உரிமைகளும் மனித உரிமைகளும் தாமாகவே கிடைக்குமென்றெண்ண வேண்டுமா? வெற்றியின் இரகசியம் அதிகாரமும், அதிகாரப் பயமுறுத்தலும் மாத்திரமா? இன்று உலகம் அம்மாதிரியான மிலேச்ச மனோநிலைக்கு மிகச் சமீபமாக இருப்பதுபோல் தெரிகிறது.

நாடுகளுக்கிடையேயுள்ள பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு ஆயுதங்களின்றி சொற்போர்களைப் பற்றி முடிவின்றிப் பேசிய போதிலும் அநேகர் ஆயுதப் போருக்கான யுத்த உதவியை வழங்க முன் வருகின்றனர். எங்களுடைய சமாதான பிராந்தியம் மட்டுமல்லாமல், உலகம் முழுவதற்கு மாத்திரமல்லாமல் மக்களுடைய உள்ளங்களில் ஆயிரக்கணக்கான சமாதான பிராந்தியங்களை உருவாக்க நாங்கள் மிகவும் உற்சாகத்துடன் முயல வேண்டும்.

அணிசேரா இயக்கத்தை ஆரம்பித்த நாடுகளுள் இலங்கையும் ஒன்று என்பதில் பெருமிதமடைவதுடன் இம் முயற்சியின் மூலம் மிகப் பாரிய பணிகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கருதுகிறோம். ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வகிக்கும் 154 நாடுகளில் 94 நாடுகள் அணிசேரா இயக்கக் கொள்கையை அங்கீகரித்துள்ளன. மேலும் பல நாடுகள் பார்வையாளர்களாகவும் விருந்தினர்களாகவுமிருந்து அணிசேராக் கொள்கைக்கு ஆதரவு நல்கின்றன.

உலக மக்களை பல திட்டங்களில் ஈடுபடுத்தி முன்னேற்றும் பல அமைப்புக்கள் ஐக்கிய நாடுகள் சபையில் உண்டு. இவற்றுள் பெரும்பாலானவை பொருளாதாரத் தொடர்புடையவை எனக் கூறப்படும் பகுதியில் அடங்கும்.

உதாரணம் பின்வருமாறு : உலகில் பொருளாதார உற்பத்திப் பகுதியின் பெரும் பகுதி—நூற்றுக்கு 25 வீதமளவு—வளர்முக நாடுகளுக்கு கி.பி. 2,000 ஆண்டளவில் கிடைக்கக் கூடியவை பற்றி பல அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதற்கிடையே வளர்ச்சியடைந்த நாடுகள் பொருளாதார களத்திற்கு அரண் அமைப்பது எங்களுக்குத் தெரிகிறது. இது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தக் கூடிய இடங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வளர்முக நாடுகள் எடுக்கும் முயற்சிகளுக்குப் பெருந்தடையாயுள்ளது.

நோக்கமும் நோக்கத்தை அடையும் வழிகளுக்குமிடையே உள்ள இடைவெளி ஏனைய களங்களிலும் மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. 1970 இன் தசாப்த ஆரம்பத்தில் வளர்முக நாடுகளின் பொருளாதார புனருத்தாரணத்திற்கு, மானிய உதவி உத்தியோகபூர்வமாக வழங்கப்படும் அபிவிருத்தி நிதி வளர்ச்சியடைந்த நாடுகளின் மொத்தத் தேசிய உற்பத்தியில் குறைந்தது நூற்றுக்கு 0·77 ஆக இருக்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ அறிக்கையில் வெளியிடப்பட்டிருந்தது. ஆனால் தசாப்தத்தின் முடிவில் குறிப்பிட்ட உதவியில் அரைப்பங்கே வழங்கப்பட்டிருந்தது. அதாவது மொத்தத் தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 0·35 ஆகும்.

படிப்படியாக அதிகரித்துவரும் பொருளாதாரச் சீர்குலைவைக் கவனிக்கும் போது வளர்ச்சியடைந்த நாடுகள் இன்று எதிர்நோக்கியுள்ள நிலைமையிலும் பார்க்க எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக இருக்கும். இவ்விரு உதாரணங்கள் மூலம் கருத்திற்கும் கருத்தின் செயற்பாட்டிற்குமிடையில் பெரும் இடைவெளி தெரிகிறது. நாங்கள் எங்கள் ஒவ்வொருவரினதும் தேவைகளைப் பொதுவாகக் கவனித்து கூட்டு முயற்சியின் மூலம் தீர்த்துக் கொள்ளாமல் தமக்கு நன்மை ஏற்படக்கூடிய விதத்தில் மாத்திரம் பார்த்து செயலாற்றுவதே இதற்குரிய பிரதான காரணமாகும்.

பாதுகாப்பு அரண் அமைப்பதிலும் வளர்முக நாடுகளுக்கு உதவி அளிப்பதிலும் உள்ள உரியநிலை இப்பொழுது தெளிவாகப் புரிகிறது. வடக்கே வளர்ச்சியடைந்த நாடுகள் வளர்முக நாடுகளுக்கு விதித்த வர்த்தகத் தடையை நீக்கினால் மூன்றாவது உலகில் வேலையற்றோரின் எண்ணிக்கை குறைவது மாத்திரமன்றி அதன் காரணமாக வடக்கிற்கும் தெற்கிற்குமிடையே வர்த்தகம் பெருகி வடக்கே வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கும் என்பது தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

தீர்க்க தரிசனமற்ற கொள்கைகளைக் கைவிடுவது வளர்ச்சிடைந்த நாடுகளின் சுயநலத்திற்கும் அவசியமாகும்.

வளர்முக நாடுகளுக்கு நன்மை அளிக்கக்கூடிய முறையில் உலகில் உள்ள கைத்தொழில்களைப் புதிதாகப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்ற கருத்து இலகுவாக ஏற்றுக் கொள்ளப்படுமென்று கருத முடியாது. உலகப் பொருளாதார அமைப்பின்படி, வளர்ச்சியடைந்த நாடுகளில் நிறுவப் பெற்றுள்ள தொழில்களில் அநேகமானவை இன்று பொருளாதார ரீதியாகப் பயனற்றவையாகியுள்ளன என்பது உண்மையாகும்.

வளர்முக நாடுகள் தமது ஏற்றுமதிப் பொருட்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தை அதிகரிக்குமுகமாக ஒன்று சேர முயலுமிடத்து,

EVELYN RUT 3

அந்நாடுகள் பொது நன்மைக்கு முரணான பாதையில் செல்லு மென்ற குற்றத்திற்குள்ளாகின்றன. இந்நிலைமை நியாயமானதா என்று கேட்க விரும்புகிறேன். நாங்கள் இவ்வாறான ஒன்றிற்கொன்று எதிரான வழிவகைகள் மூலம் ஒருவருக்கொருவர் முரணாகச் செயற்படுவது அவசியமா ?

உத்தியோக பூர்வமாக வழங்கும் அபிவிருத்தி உதவி பற்றிய பிரச்சனையும் மிகவும் தெளிவானதாகும். தமது பொருளா தாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக வளர்முக நாடுகள் முன்னேறும் போது அந்நாடுகளால் வெளிநாட்டில் இருந்து இறக்கு மதி செய்யப்படும் பொருட்களின் அளவு அதிகரிப்பதன் மூலம் வளர்ச்சியடைந்த நாடுகளுக்குக் கிடைக்கும் நன்மை அதிகமாகும். ஆனால் நிதியுதவி அவசியப்படும் இக்காலத்தில் வளர்ச்சியடைந்த நாடுகள் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காகத் திட்டங்களுக் காகச் செலவிடும் நிதியைக் குறைப்பது பற்றிப் பேசுவது மிகவும் துரதிருஷ்டமானதாகும்.

அவ்வாறு குறைப்பது உத்தியோக பூர்வமாக வழங்கும் உதவியைப் பாதிக்குமென நம்புகிறேன். வளர்ச்சியடைந்த நாடுகளில் திட்டங் களுக்குச் செலவிடும் நிதியைக் குறைக்க வேண்டுமாயின் வெளி நாட்டு உதவிகள் கடுமையாகப் பாதிக்காத விதத்தில் செயற்படு மாறு வேண்டுகிறேன்.

உதவி வழங்குமிடத்து உதவி பெறுபவர்கள் மீது ஏற்படக்கூடிய கருணை மாத்திரமன்றி தத்தமது பயனுக்காகவும் உதவியளிப் பவர்கள் தூண்டப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றனர். உலகப் பொருளாதாரம் ஒருவருக்கொருவர் வழங்கும் உதவியின் மீது தங்கியிருக்குமிடத்து வளர்முக நாடுகள் பின்னின்றால் செல்வந்த நாடுகளிடம் பொருட்களை வாங்க முடியாத நிலை ஏற்படும். வளர்முக நாடுகளில் அநேக நாடுகள் தங்களுடைய வறுமையைப் பொறுத்துக் கொண்டு வாழப் பழகியிருந்தாலும் இறுதியில் அந்த வளர்முக நாடுகளின் ஏழ்மையினால் அவ்வளர்முக நாடுகளைச் செல்வந்த நாடுகள் கட்டாயமாக கீழே தள்ளிவிடுவது உறுதியாகும்.

தொடர்ந்து நிகழும் ஒன்றிற் கொன்று முரணான இன்னோர் தன்மையை எடுத்துக்காட்ட இயலும். அதாவது வளர்ச்சியடைந்த நாடுகளினால் வழங்கப் பெறும் உதவியைக் குறைத்து யுத்த பாது காப்பு அலுவல்களுக்குச் செலவை அதிகரிப்பதாகும். மூன்றாவது உலகின் ஏழ்மை நிலை அதிகரித்து வரும் பொழுது இன்று உலகின் வளர்ச்சியடைந்த நாடுகள் போர்க் கருவிகளுக்குச் செலவிடும் 450,000 கோடிக்குக் கிட்டிய அமெரிக்க டொலர் பணத்தின் அளவுக்கும்,

AM LIBRARY
09

உத்தியோக பூர்வமாக வழங்கும் அபிவிருத்தி உதவி நிதியான 2,000 கோடி அமெரிக்க டொலருக்குமுள்ள வேறுபாட்டையும் நோக்கும் போது கவலைக்குரியதாக இருக்கிறது.

இதன் மூலம் பணம் மாத்திரம் கருதப்படவில்லை. விஞ்ஞானிகள், பொறியியலாளர் ஆகியோர்களது உழைப்பின் செல்வங்களும், நவீன விஞ்ஞான அறிவின் பெரும் பகுதியும் இதனுள் அடங்கும். குறைவாக வளர்ச்சியடைந்துள்ள நாடுகளின் பிரயோசனத்திற்குச் செல்வங்களைப் பயன்படுத்தி அந்நாடுகளை முன்னேற்றக் கூடியதாக இருக்கையில் இவ்வாறு நிகழ்வது மேலும் கவலைக்குரியதாகும்.

தேசிய வருமானத்தின் நூற்றுக்கு மூன்று வீதத்திலும் குறைவாக நாட்டின் பாதுகாப்புக்குச் செலவிடும் நாடுகளின் சார்பாகப் பேசும் நான் கூறவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அதாவது மிகவறிய நாடுகள் கூட போர்க்கருவிகளுக்காகப் பெருமளவு பணத்தைச் செலவிட வேண்டுமென எண்ணுமளவிற்குப் போர்க்கருவிகளின் மீதுள்ள ஆசை பெருகியுள்ளது.

தவறான முறையில் செல்வம் பகிரப்படுகிற சந்தர்ப்பத்தினை எடுத்துக் காட்டக்கூடிய உதாரணம் ஒன்றுண்டு. சில சந்தர்ப்பங்களில் உதவி என்ற பெயரில் சிற்சில நாடுகள் வேறு நாடுகளுக்குப் போர்க்கருவிகளை வழங்குகின்றன.

போர்க் கருவிகளுக்கும் போர்ப்பாதுகாப்பு அலுவல்களுக்கும் செலவிடப்படும் செல்வத்தினால் ஏற்படுத்தப்படும் சர்வதேச பாதுகாப்பு வளர்முக நாடுகளுக்கு உதவியாகச் செலவிடப்படும் செல்வத்தினால் ஏற்படுத்தப்படும் பாதுகாப்பினும் பார்க்க அதிகமானதாவென்பது பற்றி இவ்விடயம் குறித்து மிகநுட்பமாகச் சிந்திக்கும் போது எழும் பிரச்சனையாகும்.

கிறீஸ்த, இந்து, இஸ்லாம், பௌத்தம் போன்ற உலக மதங்கள் போரினதும் அதிகாரத்தினதும் தீங்கினை எடுத்துக் காட்டியிருக்கையில் உலக மக்கள் போர்க் கருவிகளின் பலத்தை மேன்மேலும் வலுப்படுத்துவதற்குத் தொடர்ந்தும் முயல்வதேன் ? இச்சிக்கலான பிரச்சனை பற்றி பௌத்த பாஷயத்தில் அடங்கிய தம்மபதத்தில் பின் வருமாறு கூறப்பட்டுள்ளது.

தண்ஹாய ஜாயதீ ஸோகோ — தண்ஹாய ஜாயதீ ஭யம்
தண்ஹாய விப்ப முத்தஸ்ஸ — நத்தீ ஸோகோ குதோ ஭யம்

பேராசை துன்பத்தை உண்டாக்கும்; பேராசை பயத்தை உண்டாக்கும். பேராசையிலிருந்து விடுதலை பெற்றால் துன்பம் இல்லை. பயம் இல்லை.

சமாதானத்தை நோக்கிச் செல்லும் பயணத்தின் போதும் போருக்கு எதிரான யுத்தத்தின் போதும் நாங்கள் சிறந்த மதங்கள் மூலம் உபதேசிக்கப் பெற்ற உபதேசங்களைப் பின்பற்றுவது மிகவும் பயனுடையதாகும். அப்போது தான் நாங்கள் பயத்திலிருந்து விடுதலை பெறமுடியும்.

சமீபத்தில் வரவிருக்கும் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக இரட்டை உதவி குறைந்து போவதற்கு இடமிருப்பதால் உலக அபிவிருத்தி நிதி போன்ற பன்னாட்டு உதவி நிறுவனத்தின் மதிப்பு உயர்ந்து தெரிகிறது. எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் அமைப்பு அல்லது ஒபெக் அமைப்பு மூலம் சம்பாதிக்கப்படும் மேலதிக செல்வத்தை வளர்முக நாடுகளுக்கு உதவி நிதி வழங்குவதற்குத் திருப்பி அனுப்பும் திட்டம் பற்றி சமீபத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அம்மாதிரியான அபிவிருத்தி நிதி தாமதமின்றி நிறுவப்படுமென்றும் வளர்முக நாடுகளின் பொருளாதார புனருத்தாரணத்தைச் செய்யும் வேறோர் முதலீட்டு நிதியாகுமென்பது எங்கள் நம்பிக்கையாகும்.

இது பற்றிப் பேசும் போது நான் ஒரு கோரிக்கைவிட வேண்டியுள்ளது. அதாவது பன்னாட்டு அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் ஏற்படுத்தப்படும் நாள்தோறும் அதிகரித்து வரும் கடும் சட்டதிட்டங்களையும் நிபந்தனைகளையும் மீண்டும் ஆராய வேண்டு மென்பதாகும். இச் சட்டதிட்டங்களை ஏற்படுத்துமிடத்து அன்றிருந்த நிலைமையிலும் பார்க்க வேறுநிலை உலகம் முழுவதும் சிறப்பாக வளர்முக நாடுகளில் உருவாகியிருப்பது இதற்குக் காரணமாகும். மிகவும் முறையான சர்வதேச பொருளாதார அமைப்பினை நோக்கி ஆக்கப்பெற்ற இச் சட்டதிட்டங்களை இன்றுள்ள சிக்கலான நிலைக்கேற்ப மாற்றுவது அவசியமாகும்.

சர்வதேச பொருளாதார ஒத்துழைப்பிற்கும், அபிவிருத்திக்குமுரிய விசேட கூட்டத் தொடர் இப்பொழுதுதான் முடிவடைந்தது. நாங்கள் எதிர் காலத்தில் பெரும் பணிகளை நிறைவேற்றக்கூடிய பல களங்களைத் தெரிவு செய்துள்ளோம். பரந்த ஒத்துழைப்பின் மீது நிகழும் பேச்சு வார்த்தைகளின் பெரும்பேறாகப் பெரும் பலன் கிடைக்குமென்ற எண்ணம் எனக்குத் தைரியத்தைத் தருகிறது. பேச்சுக்களிலும் வழிமுறைகளிலும் மாத்திரம் கவனம் செலுத்திக் கொண்டிருக்கத் தேவையில்லை. எங்களுக்கிடையே ஏற்படும் நல்லெண்ணப் பேச்சு வார்த்தைகளில் விரிவான பயன்களைப் பற்றி உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உலகின் புதிய அபி

விருத்தியை எற்படுத்துவதற்கு இதுவரை கைக்கொள்ளப்பட்ட அபி விருத்தி வழிகள் மூலம் அவ்வளவு பயன் கிடைக்காதது துரதி ருஷ்டமே.

கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக உலகளாவிய துரதிருஷ்ட வசமான யுத்த பயமுறுத்தலில் இருந்து தப்பியிருக்கும் அதிர்ஷ்டம் எங்களுக்குக் கிடைத்துள்ளது. ஆனால் மனித இனத்தை வருத்தும் மனிதத்தன்மையை அவமதிக்கும் வறுமை என்னும் சக்தி வாய்ந்த பயமுறுத்தலில் இருந்து எங்களால் தப்பமுடியவில்லை.

உலக மட்டத்தில் கவனிக்குமிடத்து செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்கு மிடையேயுள்ள வித்தியாசமும் வடக்கு–தெற்கு நாடு களுக்கிடையேயுள்ள வேறுபாடும் ஒரே சம அளவில் இருப்பது தெளிவாகத் தெரிகிறது. வடக்கே வாழும் உலக சனத்தொகையில் நாலில் ஒரு பங்கு மக்கள் உலக வருமானத்தின் நாலில் மூன்று பங்கை அனுபவிக்கிறார்கள், உலக வருமானத்தின் மீதமாயுள்ள குறைந்த அளவையே தெற்கே வாழுகின்ற உலக சனத்தொகையின் நாலில் மூன்று பங்கு மக்கள் அனுபவிக்கிறார்கள்.

உலக வருமானத்தை உலக மக்களுக்கிடையே பகிர்ந்து கொள் வதில் காணப்படும் முரண்பாடு பற்றி நாம் முன்பு காட்டிய உதா ரணத்தின் மூலம் செல்வங்களைப் பயன்படுத்தும் முரண்பாடும் ஏழ்மை பற்றிய நெருக்கடியும் ஆழமும் மிகத் தெளிவாகத் தெரி கின்றது. இம் முரண்பாட்டைக் குறைக்கவும் மனித இனத்தை எதிர்நோக்கியுள்ள பயமுறுத்தலை ஒழிக்கவும் உலக மக்கள் குழு பலவித முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

சர்வதேச அபிவிருத்திப் பிரச்சனை பற்றி அறிக்கை தயாரிப்பதற்கு சுதந்திர ஆணைக்குழுவொன்று சமீபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாணைக்குழு பிராண்ட் ஆணைக்குழு என்னும் பெயரில் பிரசித்த மாகியுள்ளது. பிராண்ட் ஆணைக்குழு நியமிக்கப்பட்ட ஆண்டிலி ருந்து பதினொரு ஆண்டுகளுக்கு முன் பியர்ஸன் ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருந்தது. காலஞ் சென்ற லெஸ்டர் பியர்ஸனின் தலை மையில் நடைபெற்ற சர்வதேச அபிவிருத்தி ஆணைக்குழு மூலம் வெளியிட்ட சில பகுதிகளை இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூருவது மிகவும் முக்கியமாகும்.

அவர் பின்வருமாறு கூறுகிறார்: "சர்வதேச அபிவிருத்தி யென்பது நாங்கள் வாழும் இந்த யுகத்தின் மிகவும் சக்தி வாய்ந்த சவாலாகும். அந்நியோன்னிய உதவியில் வாழ்வதென்பதில் என்ன கருதப்படுகிற தென்பதை நாங்கள் விளங்கிக் கொண்டிருக்கிறோமா

என்பதே அச்சவாலை எதிர்நோக்குவதில் உள்ள தெளிவாகும். மனித இனத்தின் பெரும்பான்மையோரின் வறுமையையும் தட்டுப் பாட்டையும் மறந்து உலகில் வாழும் நாம் எதிர்நோக்கும் பெரும் துன்பம் என்னும் பெயரில் மறப்பதற்கு முயல்வதைப் போன்ற வேதனை வேறுண்டா ?

பிராண்ட் ஆணைக்குழுவும் மிகத் தெளிவாக அந்நியோன்னிய உதவியின் மதிப்பை எடுத்துக்காட்டியது. பிராண்ட் ஆணைக்குழுவும் நற்கருமங்கள் பற்றி மற்றைய ஆணைக்குழு அளவு கவனஞ் செலுத்தியுள்ளது. பிராண்ட் ஆணைக்குழு நிகழ் காலத்திற்கும் எதிர் காலத்திற்கும் ஏற்ற வண்ணம் சமர்ப்பித்த ஆலோசனைகளும் திட்டங்களும் மிக முக்கியமானவை. இந்த அறிக்கை பற்றி உலக மக்கள் குழு காட்டிய ஊக்கமும் கவனமும் எல்லோருடைய கவலைக்கும் காரணமாயிற்று. அவ்வறிக்கை கருத்தரங்குகளிலும், உரையாடல்களிலும் முதலிடம் பெறுவதற்குப் பதிலாக இதற்குமுன் வந்த அம்மாதிரியான அறிக்கையுடன் மூலைக்குள் தள்ளப்பட்ட ஆபத்தான நிலைக்குள்ளாகியது.

ஏதாவது செயற்றிட்டம் பற்றி அல்லது வழிமுறை பற்றி ஆலோசனை கூறிய போது அவற்றைப் பின்போடுவதற்காக எல்லையற்ற காரணங்கள் தடையாக முன்னிற்கின்றன. அவற்றைச் செயற்படுத்துவதற்கு தகுந்த காலம் இதுவல்லவென்று சிலர் கூறுகின்றனர். காரணம் எதுவாயினும் திட்டம் செயற்படாமல் இருப்பதையே நாம் காணவும் கேட்கவும் கூடியதாக இருக்கிறது.

வளர்முக நாடுகளில் வாழும் நாங்கள் உலகத்திடம் தரும உதவி கோரவில்லை. தரும உதவி மூலம் நாடுகளிலுள்ள வறுமையை ஒழிக்க முடியுமென நம்பவில்லை. சுரண்டலை முற்றாக ஒழிப்பதன் மூலமே வறுமையை ஒழிக்க முடியும். சகல மனிதர்களையும் சகல நாடுகளையும் சம அளவில் வைக்கமுடியாது. ஆனால் சகல நாடுகளுக்கும் சகலருக்கும் சமமான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

வறுமைக்குத் துண்டுதலாயுள்ள சுரண்டல் இன்று சர்வதேச பொருளாதார அமைப்பில் அடங்கியுள்ளது. ஆகையினாலேயே இந்த அமைப்பை மாற்ற வேண்டியுள்ளது. நாங்கள் இதன் காரணமாகவே புதிய சர்வதேச பொருளாதார செயற்றிட்டம் பற்றி கூறுகிறோம். இது மனித உரிமைகளை மதிக்கும் செயற்றிட்டமாக இருத்தல் வேண்டும். இது பொருளாதார முரண்பாட்டையும் வறுமையையும்

நீக்குவதற்கு உதவுவதாக இருக்க வேண்டும். இதன் மூலம் போஷாக்கின்மையையும் படிப்பின்மையையும் நீக்குவதற்குப் பரிகாரங் காண வேண்டும்.

நான் நாடுகளுக்கிடையே மாத்திரம் இருக்க வேண்டிய புதிய செயற்றிட்டம் பற்றிப் பேசவில்லை. நாங்கள் இப்புதிய செயற்றிட்டத்தை எங்கள் நாடுகளிலும் அமைக்க வேண்டும். நாங்கள் சமாதானமாக இருக்காமல் உலக சமாதானத்தை எதிர்பார்க்கக் கூடாது. எங்கள் நாட்டிலே, எங்கள் சமூகத்திலே, எங்கள் குடும்பத்திலே சுருக்கமாகக் கூறின் எங்களுக்குள்ளேயே சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ளாவிட்டால் எங்களால் உலக சமாதானத்தை ஏற்படுத்த முடியாது.

மற்றவர்களிடம் தன்னடக்கத்தினை எதிர்பார்ப்பதற்கு முன் நாங்கள் தன்னடக்கமுடையவர்களாக வேண்டும். மற்றவர்களைச் சுரண்டும் பழைய பொருளாதார வழிமுறையை எங்கள் நாட்டில் இருக்கவிட்டு புதிய சர்வதேச பொருளாதார வழிமுறைகளை ஏனைய நாடுகளில் ஏற்படுத்த முடியாது. ஏனைய நாடுகளில் சுரண்டலையும் முரண்பாடுகளையும் ஒழிக்க வேண்டுமென குரலெழுப்புவதோடு எங்கள் நாட்டில் பொருளாதாரத்தாக்கம், பொருளாதார முரண்பாடு ஆகியவைகளை வளர இடங் கொடுக்க கூடாது.

மனித இனத்தைச் சுரண்டலிலிருந்து விடுவிப்பது சர்வதேச மட்டத்தைப் போலவே தேசிய மட்டத்திலும் நிகழவேண்டும். மக்களுக்கிடையே இடம்பெற்றுள்ள வித்தியாசங்களும் முரண்பாடுகளும் ஒன்றுடனொன்று இணைந்துள்ளன. இது வடக்கைப் போல் தெற்கிற்கும் பொதுவானதாகும். கண்ணாடி வீடுகள் அநேகமுண்டு. நாங்கள் இவ்வீடுகளை மாற்றியமைப்போம். அதற்கிடையில் அவற்றிற்குக் கல்லெறிவதைத் தவிர்ப்போமாக.

தலைவர் அவர்களே ! தேசிய நீதியாகவும் சர்வ தேசிய நீதியாகவும் தீர்மானமெடுக்குமிடத்து இயன்றளவு மக்களைச் சம்பந்தப்படுத்திக் கொள்வதன் அவசியம் பற்றி எப்பொழுதும் நான் கவனஞ் செலுத்தி வருகிறேன். வறுமைக்கெதிராக நடத்தும் உலகளாவிய போரில் வீடமைப்பது அடிப்படையான அம்சமாகக் கருதுகிறேன். நெருக்கம், சுகாதாரப் பாதுகாப்புக்குரிய தீங்கு, பாதுகாப்பின்மை ஆகிய நெருக்கடிகளை நீக்க வேண்டும். எங்கள் மக்கள் வாழும் சூழல் அவர்களுக்கு அமைதி அளிக்கக் கூடியதாக்க வீடமைப்பு மிக முக்கிய இடத்தை வகிக்கிறது.

அபிவிருத்தியைத் துரிதப்படுத்துமிடத்து நகர் அபிவிருத்தியும் முறையாக நடைபெறுவிடின் நகரச் சூழலும் பாதிக்கப்பட்டு சேரிகளும் முடுக்குகளும் அதிகரிப்பது நிச்சயம். இதற்கிடையில் நகரை நோக்கிவரும் கிராம மக்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். நகரில் நெருக்கடி, சுத்தமின்மை, வறுமை ஆகியவை அதிகரிக்கும். இவற்றை வளர்ந்துவரும் எந்த நாட்டிலும் காணக்கூடியதாக இருக்கிறது.

வளர்முக நாடுகளில் வாழும் எங்கள் மக்களில் நூற்றுக்கு இருபது வீதமானோர் போஷாக்கின்மையால் வாடுவதாக அறிவிக்கப்படுகிறது. நூற்றுக்கு ஐம்பது வீதமானோருக்கு நல்ல சுத்தமான நீர் கிடைப்பதில்லை. நூற்றுக்கு அறுபது வீதமானோருக்கு சரியான சுகாதாரப் பாதுகாப்புக் கிடைப்பதில்லை. குழந்தைகளில் நூற்றுக்கு இருபது வீதமானோர் ஐந்து வயதினை அடையுமுன்பே மரணத்திற்கு இரையாகின்றனர்.

தொழில் வசதியின்மை, கல்வி, மற்றும் ஏனைய அத்தியாவசியத் தேவைகள் பற்றியும் கிடைக்கும் புள்ளிவிபரங்கள் கவலைக்குரியவையாக உள்ளன. நாங்களெல்லோரும் எங்களுக்கு இயன்ற விதத்தில் இம்முக்கிய பிரச்சனைகளைத் தீர்க்க முயல வேண்டும். நல்ல வீடுகளை அமைப்பதன் மூலம் இக்குறைகளைத் தீர்க்கமுடியும்.

வீட்டுப் பிரச்சனை இலங்கைக்கு மாத்திரம் உரிய பிரச்சனையன்று. இது ஆசியாவிற்கு மாத்திரமுள்ள சிறப்பான பிரச்சனையுமன்று. இது உலகம் முழுவதற்குமுரிய பிரச்சனையாகும்.

ஆகவே வீடில்லாதவர்களுக்கு வீடமைத்துக் கொடுக்கும் நோக்குடன் சர்வதேச ஆண்டினைப் பிரகடனப்படுத்துமாறு வேண்டுகிறேன். இவ்வாண்டின் சிறப்பான நோக்கம் சேரி வாசிகளுக்குப் புனர்வாழ்வளிப்பதாக அமையக் கூடும். சேரிகளுக்குப் பதிலாக நல்ல வீடுகளை அமைக்கும் பணிக்கு அபிவிருத்தி வேலைகளில் முக்கிய இடமளிக்க வேண்டும். வீடமைப்புக்காக எடுக்கும் முயற்சி மனித வரலாற்றின் முன்னேற்றத்திற்கான சிறந்த முதலீடாகும்.

தலைவர் அவர்களே! மதிப்புமிக்க பிரதிநிதிகளே! அடுத்த பல ஆண்டுகளில் உலகம் தீர்த்துவைக்க வேண்டிய சில பிரச்சனைகளைப் பற்றி நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தேன். அது ஒரளவேயாகும். எண்பதின் தசாப்தத்தின் வாசலில் வந்திருக்கிறோம். எங்களை எதிர்நோக்கும் பிரச்சனைகளை முழுமையாகவும் நேர்மையாகவும் தீர்ப்பது எங்கள் யாவரினதும் கடமையாகும்.

அவரவர்களுக்கிடையே ஒத்துழைப்பிருந்தது போல் மோதலும் மனித வரலாற்றின் ஓர் அம்சமாக அமைந்துள்ளது. ஆதிகாலத்தில் குறுகிய, பிராந்திய பிரச்சனை இம்மாதிரியான மோதல்களுக்குக் காரணமாயிருந்தது. மொழி, இனம், மதம் ஆகியவைகளினால் மனிதன் பிரிக்கப்பட்டான். அவற்றின் பெயரால் மக்கள் போராடினார்கள். இறந்தார்கள். துரதிர்ஷ்டவசமாக மனிதனால் உருவாக்கப்பெற்ற குறித்த பலவிதமான வித்தியாசங்கள் காரணமாக இன்றும் மனிதருக்கிடையே பிரிவு நிலைத்துள்ளது.

பல விதமான கருத்துகளுக்கும் வாதங்களுக்கும் அடிமைப்பட்டு அவற்றில் தொங்கிக் கொண்டிருப்பதால் மனிதர்களுக்கிடையே மோதல் ஏற்பட்டது. இதற்கிடையில் கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையேயுள்ள கருத்துக்களைப் பற்றியும் நாங்கள் நீண்ட காலமாக விவாதித்துள்ளோம்.

இன்று உலகை வருத்தும் நோய் உபத்திரவத்தின் அடையாளங்களான பணவீக்கம், வர்த்தக வாய்ப்பின்மை, நாணயமுறை, நிரந்தர உணவு உற்பத்தி, வர்த்தகப் பொருள் பற்றிய நெருக்கடி ஆகியவைகள் எதிர்காலத்தை யுத்த முன்னணிக்கு வழிவகுக்கும் அடிப்படைக் காரணங்களாக அமைந்துள்ளன. இவை சில சமயங்களில் ஏழை – பணக்காரன் ஆகிய இரு வர்க்கத்தினருக்குமிடையில் இருக்கக் கூடும். இன்றேல் வடக்கிற்கும் தெற்கிற்குமிடையில் இருக்கக்கூடும்.

வடக்கிற்கும் தெற்கிற்குமிடையேயுள்ள விவாதத்தை அவ்விரு பகுதியினருக்குமிடையே நல்லெண்ண விவாதமாக வளர்த்து முன்கூட்டியே அம்மாதிரியான மோதலைத் தவிர்க்கும் வழியாக்கிக் கொள்ளவேண்டும். அதன்பின் அதனை இன்றும், நாளையும், மறுநாளும் செயற்படும் செயற்றிட்டத்தின் நிகழ்ச்சி நிரலாக்கிக் கொள்ள வேண்டும்.

தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் எங்களுக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளும் கூட்டு பிரதிக்ஞையின் மூலமும் ஒற்றுமையான செயற்றிட்டத்தின் மூலமும் மாத்திரமே இன்றைய நெருக்கடியை வெற்றிகரமாக எதிர்நோக்க முடியுமென நான் நம்புகிறேன். இச் சவாலை வேறொருவரிடம் கையளிக்க முடியாது. இது எங்களுடைய உலகம், நாங்கள் அங்கு வாழ்வது மாத்திரமன்றி, நாங்கள் வாழும் உலகை எல்லோரும் வாழக்கூடிய தகுந்த இடமாக நாங்கள் அமைக்க வேண்டும்.

அமிர்.பிரேமதாஸ

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

மூன்றாவது உலகத்தில் . . . .

உலக மக்களில் 70% த்திலும் கூடுதலானவர்கள் இருக்கின்றனர்

உலகின் வர்த்தகக் கப்பல்களில் 10% உள்ளன

உலகின் புகையிரதப் போக்குவரத்தில் சுமார் 12% உள்ளது

உலகின் வானொலி பெறும்/அனுப்பும் சாதனங்களில் 20% உள்ளன

உலகின் கைத்தொழில் உற்பத்தி விளைவில் சுமார் 8% உள்ளது

உலகின் தேசிய மொத்தப் பெருக்கத்தில் சுமார் 10% உள்ளன

உலக வர்த்தகத்தின் 20% த்திலும் குறைவாகவுள்ளது

உலகின் ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமுள்ள ஆற்றலில் சுமார் 5% உள்ளது

EVELYN RUTNAM LIBRARY
309
JAFFNA